இந்தி மறுப்புக்
கட்டுரைக் கொத்து

சத்தியாக்கிரஹ போர்ப் படை
அழைப்பு.

உடன் முன் வருக வருக.

ஹிந்திக் கட்டாயப் பாடமுயற்சி மிக நெருங்குகிறது கரம். ஆச்சாரியார் பிடிவாதம் தீராநோயாய் இருக்கிறது. "மயிலே மயிலே இறகு போடென்றால் போடாது" பிடுங்கத்தான் வேண்டும். ஆகையால் இனி, சத்தியாக்கிரஹத்தை தவிர வேறு வழியில் ஹிந்தியை எதிர்ப்பதில் பயனில்லை. வீரத்தாயாகிய தமிழ்ச் செல்வியின் இருப்பிடமாகிய தமிழ் ஜில்லா ஒவ்வொன்றிலும் தமிழ் இளைஞர்களும் வீரர்களாகிய பெரியார்களும் சத்தியாக்கிரஹப் படையில் சேரமுன் வரவேண்டும், அவ்விதம் சேர்ப்பதற்கு ஒவ்வொரு ஜில்லா பெரியாரும் முயற்சிக்கவேண்டும். அவ்விதம் சேருகின்ற படையினர் முழுவிலாசத்தோடு உள்ள அட்டவணைகளை கருவூர், ஈழத்து சிவானந்த அடிகளுக்கு அனுப்பவேண்டும் 1938 ஜனவரியில் சத்தியாக்கிரஹம் நடைபெறவேண்டும். எஸ். எஸ். பாரதியார் எம். எ. பி. எல். அவர்களும் வீரர் தலைவராகிய ஈ. வெ. ராமசாமி பெரியாரும் ஹிந்திப்போர்ப்படையை நடத்தும் பொறுப்பாளராக முன் வரவேண்டும். இத்திருப்பணி விரைவில் நடைபெற்றால் வெற்றி நம்மதே. காலம் தாழ்த்தல் கூடாது. தமிழ் வாழ்க. ஹிந்தி ஒழிக.

வள்ளல் சோ. சிவஞான தேசிகர்,

முத்தையா பிரெஸ், திருநெல்வேலி ஜங்ஷன்

தேசிகர்
வெளியீடு எண் 2

ஹிந்தி மறுப்புக் கட்டுரைக் கொத்து.

(ஹிந்தி கட்டாய பாடம் வேண்டாம். மூன்று பாரங்களில் கற்ற ஹிந்தி உருப்படாது. வீண் கஷ்டந்தான் மிச்சம். ஹிந்தி பயின்றதனால் வடநாட்டில் வேலையும் கிடையாது. வடநாட்டாரே வேலைக்குத் திண்டாடுகிறார்கள். ஹிந்தியை முஸ்லீம்கள் ஆதரிக்கவில்லை. சமய சமூகத் தடைகளும் உண்டு.)

I மாஜி சட்டமந்திரி Sir. M. கிருஷ்ண நாயர் ("Hindu" 17-11-37)

எனது நண்பர்களான கனம். முதன் மந்திரி ராஜகோபாலாசாரியாரும் கல்வி மந்திரி கனம். சுப்பராயனும் முதல் மூன்று பாரங்களில் ஹிந்தி கட்டாய பாடமாக்குவதைக் கடைசியாக முடிவு செய்திருக்கமாட்டார்கள் என நம்புகிறேன். சாமானிய மாணவமாணவிகள் மனோசக்தி மிகவும் குறைவானது. ஒரு மாணவன் அல்லது மாணவி பள்ளிக்கூடத்தில் இங்கிலீஷ், மலையாளம் அல்லது தாய்ப்பாஷை, கணக்கு, பூகோளம், சரித்திரம் முதலிய பாடங்கள் படிக்கவேண்டியதாக இருக்கிறது. அவைகளுடன் ஹிந்தியும் கற்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது குழந்தைகளின் மூளைக்கு அமிதமான வேலையைக் கொடுப்பதாகும். 15வயது நிறைந்த பிறகே மாணவமாணவிகள் S. S L. C. பரீட்சையில் சேரலாம். எனவே, ஆறாவது பாரத்தில் மாணவர்களின் சராசரி வயது 15என ஏற்படுகிறது, ஆகவே முதல் மூன்று பாரங்களில் படிக்கும் மாணவ மாணவிகளின் சராசரி வயது முறையே 10, 11, 12 ஆகவே இருக்க வேண்டும். ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் மூன்றாது வகுப்புவரைப் படித்த மாணவ மாணவிகள் கிராமங்களுக்குச் சென்று பெற்றோர் தொழி [illegible] ஈடுபடும்போது தாம்படித்தவைகளை வெகு சுலபத்தில் மறந் [illegible] த்து வாசனையில்லாதவர்கள் ஆவதை நாம் அனுபவத்தில் காண் [illegible] தாய்ப்பாஷையில் கற்ற கல்வியின் கதியே இதுவானால் முதல் [illegible] பாரங்களில் கற்றுக்கொள்ளும் ஹிந்தியின் கதி என்ன ஆகுமெ [illegible] நான் சொல்லவும் வேண்டுமோ? பள்ளிக்கூடத்தை விட்டுப் [illegible] ந்ததும் மாணவ மாணவிகள் கட்டாயம் ஹிந்தியை மறக்கத்தா [illegible] செய்வார்கள்.

ஹிந்தியும் வேலையில்லாமையும்.

ஹிந்தி கற்ருல் வேலையில்லாதவர்கள் வடநாட்டுக்குச் சென்று பிழைக்க வழியேற்படுமென்று சொல்லப்படுகிறது. 1937 மே 31ல் மகா கனம் Sir தேஜ் பகதூர் சாப்ரூ லண்டன் கிழக்கிந்திய சங்க முன்னிலையில் ஒரு உபந்நியாசம் படித்தார். அதில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

படிப்பாளிகள் வேலையில்லாமலிருப்பதை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட கமிட்டியில் நான் தலைவனுக இருந்தேன். அப்பொழுது கலாசாலைப் பட்டதாரிகள் மாதம் 13, 15 ரூபாய் சம்பளத்தில் கான்ஸ்டபிள்களாக இருக்கிருர்கள் என்றும் கான்பூர் முதலிய நகரங்களில் பட்டதாரிகள் தெருத்தெருவாய் பால் விற்கிருர்கள் என்றும் அநேக உத்தியோகஸ்தர்கள் சாட்சியம் கூறினுர்கள் மேலே எடுத்துக்காட்டியிருக்கும் Sir சாப்ரூ அபிப்பிராயங்களில் வடநாட்டின் நிலைமை விளக்குகிறதல்லவா? நம்முடைய மாகாணத்திலும் வேலையில்லாப் படிப்பாளிகள் இருந்தாலும் வடநாட்டு நிலைமைக்கு அவர்கள் வரவில்லை. ஹிந்தி தாய் மொழியாக இருக்கும் ஐக்கிய மாகாணநிலைமை இப்படி இருக்கும்போது ஹிந்தி படித்த தென் நாட்டார் வடநாட்டுக்குச் சென்று எப்படித் தொழில் தேடப் போகிருர்கள்?

சமூக சமயப் பிரச்சினைகள்.

ஹிந்தி அகில இந்தியப் பொதுப்பாஷை ஆக்கப் படும்போது சமூக சமயப் பிரச்சினைகளும் கிளம்பக்கூடும். இடைக்கால மந்திரி சபையில் முஸ்லிம் மந்திரியாக இருந்த கான் பகதூர் P. கலிபுல்லா சாஹிப் எற்கனவே இந்தப்பிரச்சினையைக் கிளப்பி உருது பாஷையே அகில இந்தியப் பொதுப் பாஷையாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிருர் எனக்கு ஹிந்தியும் தெரியாது உருதுவும் தெரியாது. எனினும், ஹிந்தியில் ஏராளமான சம்ஸ்கிருத பதங்களும் உருதுவில் ஏராளமான பார்வி வார்த்தைகளும் அடங்கியிருப்பதாக அறிகிறேன். மற்று, ஹிந்தி, திராவிடபாஷைகளைப்போல் இடமிருந்து வலமாகவும், உருது வலமிருந்து இடமாகவும் எழுதப்படுவதாக தோன்றுகிறது. சில ஹிந்துக்கள் சம்ஸ்கிருதத்தைப் புனித பாஷையாக மதிக்கிருர்கள் சில முஸ்லீம்கள் அரபி பாஷையே புனித பாஷை என நம்புகிருர்கள். ஹிந்தியை ஒருசாரார் ஆதரிக்கிருர்கள் என்பதை நான் மறந்து விடவில்லை. ஆனல் ஆதரிப்பவர்களைவிட எதிர்ப்பவர்களே அதிகம் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே சாதக பாதக அபிப்பிராயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து முதல் மந்திரியும் கல்வி மந்திரியும் ஹிந்திப் பிரச்சினையை முடிவு செய்வார்கள் என்று நம்புகிறேன். ஹிந்தியை இஷ்டபாடம் ஆக்குவதை

அதற்கு சர்க்கார் பொருள் உதவி செய்வதையும் நான் ஆட்சேபிக்க வில்லை எனக்கூறுகிறார்.

II ஆந்திர சர்வக் கலாசாலை வைஸ்சான்சலர் டாக்டர் C. R. ரெட்டி M. A., ("Madras Mail" 24—10—37)

ஹிந்தி விஷயத்தில் ஏற்கனவே எதிர்ப்புகளும் சங்கடங்களும் ஏற்பட்டுவிட்டன. கட்டாயமின்றி பாடசாலைகளில் பள்ளிக்கூடம் ஒழிந்த நேரங்களில் ஹிந்தி கற்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் அதனை எதிர்க்க முன்வரவில்லை. அரசாங்கத்தார் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கி வரிப்பணத்தையும் அதற்குச் செலவிட்டால் ஜனங்கள் பொறுக்கமாட்டார்கள் என்பதை அரசியல் வாதிகள் அறிய வேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறார்.

III இடைக்கால மந்திரி கான்பகதூர் P. கலிபுல்லா சாஹிப், ("விடுதலை" 29—11—37)

ஹிந்தியைக் கட்டாயபாடம் ஆக்கப் போகிறோமென்று வீண் சபதம் போட்டுக் கொண்டு அலைகின்றார்கள். ஹிந்தியைப் படித்து வேலையில்லாமல் திண்டாடுகிற பார்ப்பனர்களுக்கு பிழைப்புக்கு வழிகாட்ட முதன் மந்திரி கனம். ராஜகோபாலாசாரியார் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்க கங்கணங்கட்டிக் கொண்டிருப்பதாய் ஒரு சாரார்குறிக்கின்றனர். பிரதம மந்திரியார் பிடிவாதத்துக்குக் கண்டனங்கள் தினே தினே வந்து குவிந்த வண்ணமாயிருக்கின்றன. கனம். ராஜகோபாலசாரியார் வாதத்துக்கு மருந்து கொடுக்கலாம். பிடிவாதத்திற்கு மருந்து கிடையாது. தூங்குகின்றவனைத் தட்டி எழுப்ப முடியும். கண்களை இறுக்கி மூடிக்கொண்டு பாசாங்கு செய்பவனைத் தடிகொண்டு அடித்தால் ஒழிய கண் விழிக்கமாட்டான் என்பது போல் கனம். ஆச்சாரியார் தன் அக்கிரமத்தை எளிதில் உணரப்போவதில்லை. "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு' "கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே" இப்பழமொழிகளுக்கு ஏற்ப மந்திரியார் மட்டும் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் அந்நாள் காங்கிரஸ் கட்சிக்கு தமிழ் நாட்டில் சனியன் பிடிக்கும் நாள் என்று திட்டமாய் நினைத்துக்கொள்ளட்டும் என்கிறார்.

VI [illegible]ாம்பலத்தில் ஹிந்திப்பள்ளிக்கூட அஸ்திவாரக்கல் நாட்டிய கூட்டத்தின் தலைவர் நவாப் அப்துல் ஹக்கீம், ("விடுதலை, 18-10-37)

மந்திரியார் ஹிந்தியைக் கட்டாய பாடம் ஆக்குவதில் பிடிவாதம் செய்யக்கூடாது. ஹிந்தி கட்டாய பாடமாக வந்தால் தமிழ் வளர்ச்சியடைய முடியாது. இப்போதுள்ள மந்திரிமார்களில்

எத்தனைபேருக்கு ஹிந்தி தெரியும்? மயிலாப்பூரிலுள்ளவர்கள் எல்லாம் ஆங்கிலத்திலே பேசுவதும் மற்றவர்களை மட்டும் ஹிந்தியைக் கற்கச்சொல்லுவதும் சரியல்ல. முதன் மந்திரி இக்கட்டாய எண்ணத்தை விட்டுவிட வேணுமென்று வற்புறுத்துகிறார்.

V மாஜி அட்வகேட் ஜெனரல் T. R. வேங்கட்டராமசாஸ்திரியார், C. I. E., ("Hindu", 11—11—37)

ஹிந்தி கட்டாயபாடம் அரசியல் கிறுக்கு

தமிழ் நாட்டார் ஹிந்தியை விரும்பார், 100ல் 95பேருக்கு ஹிந்தி அவசியமில்லை ஹிந்தி அகில இந்திய பொதுப் பாஷை ஆகாது. வங்க, மகாராஷ்ட்ர, கூர்ஜர, பாஞ்சால மக்கள் ஹிந்தியைத் தாய்மொழியாக ஒப்புக் கொள்வார்களா? ஹிந்தியைத் தாராளமாக இஷ்டப்பாடமாக்கலாம். விருப்பமுடையவர்கள் கற்றுக் கொள்வார்கள் கட்டாய பாடமாக்குவது அரசியல் கொடுங்கோன்மை.

தாய் மொழி கட்டாயப் பயிற்சிக்காக வற்புறுத்தாமல் ஒரு அந்நிய பாஷையை விருப்ப பாடமாக்காமல் கட்டாய பாடம் ஆக்குவது இராக்ஷஸத்தனமாகும். ஹிந்தி விஷயத்தில் அரசியல் கொடுங்கோன்மை அல்ல, அரசியல் கிறுக்குத்தனமே அமல் நடத்த முன் வந்திருக்கிறது. தென் நாட்டு மக்கள் பெரும்பாலாருக்கு ஹிந்தி தேவையில்லை யென்று கூறுகிறார்.

VI மதுரைக் காலேஜ் புரொபஸர் கிருஷ்ணமூர்த்திராவ், M. A., ("Hindu", 10—10—37)

தென் நாட்டில் சில மகமதியர்கூட ஹிந்துஸ்தானி பேச முடியாது. ஹிந்தி கற்பதற்கு பிள்ளைகளுக்கு மிகவும் கஷ்டம். பள்ளிக்கூடத்தில் தவிர வெளியில் வீடு, பஜார், ஆபீஸ் முதலிய இடங்களில் உபயோகப்படாத பாஷை ஆகையால் அது, வளர்ச்சியடையாது என்கிறார்.

VII டாக்டர் மஹா மஹோ உபாத்தியாயர் உ. வே. சாமிநாதையர் ("விடுதலை", 27—11—37)

ஹிந்தியைக் கட்டாய பாடமாகப் பள்ளிகளில் வைத்து நடத்த அரசியலார் முடிவு செய்திருப்பது அடாததொன்று. பாடத்திட்டத்தில் ஹிந்தியை நுழைக்கலாகாது என்று முதன் மந்திரியாரிடத்தில் தான் முறையீடு செய்யப்போவதாய்க் கூறுகின்றார்.

VIII மதுரைத் தமிழ்ச் சங்கம் ("விடுதலை", 15—10—37)

சென்னை அரசாங்கத்தார் ஹிந்தியைப் பாலர்களுக்கு கட்டாய பாடமாக வைத்தால் தமிழின் வளர்ச்சிக்கு மிகவும் பாதகம் ஏற்படும். தமிழானது எவ்விதத் துணைப்பாஷையின் உதவியின்றித் தனித்து இயங்கக் கூடியது. தமிழ் நாட்டுக்குத் தமிழ்தான் கட்டாய பாடமாக இருக்கவேண்டும். ஹிந்தியை வேண்டுமென்றால் மேல் வகுப்பு மாணவர்களுக்கு இஷ்டபாடமாக வைக்கலாமென்று கூறுகின்றது.

—————:O:—————

தமிழன்பர்களே!

திருவும் தெள்ளிய அறிவும் வாய்ந்த நம்நாட்டுப் பெரியார் சிலரது ஹிந்தி மறுப்புரைகளை இவ்வெளியீட்டில் கொண்டு வந்திருக்கிறேன். ஹிந்தி மறுப்புரைகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு வெளியீடாகப்பொது ஜனங்களுக்கு உதவினால் நலமாயிருக்கும். நிற்க. காங்கிரஸ் மந்திரிகள் இவ்விந்திய நாட்டிற்கு ஒருபொதுப்பாஷை வேண்டுமென்று கருதுகிறார்கள். பொதுப்பாஷை அவசியமானால் ஒரு பாஷையாக இருந்தால் போதாதா? நமது இந்திய நாட்டிற்கு ஹிந்தி ஒரு பொதுப்பாஷை ஆகவும் உலகத்திற்கே ஆங்கிலம் ஒரு பொதுப்பாஷை ஆகவும் இருக்கவேண்டுமென்று முதல்மந்திரியார் கருதுகிறார். ஆகவே தமிழ் மக்கள் தாய்மொழி தவிர இரண்டு பொதுப்பாஷைகளைக் கற்க வேண்டியவர்களாகிறார்கள். இது வீண் காலக்கழிவும் பயனற்ற செயலும் ஆகும் அல்லவா? தென் நாட்டிற்கு ஹிந்தி புதிதாய்க் கொண்டுவரப்படுகிறது. ஆங்கிலமோ நம் நாட்டிற்கு வந்து பல உயர்ந்த உண்மை அறிவுகளை நமக்கு உதவி முன்னேற்றத்தில் நம்மை முன்னணியில் நிற்கும்படி செய்திருக்கிறது. உலகப் பொதுப்பாஷையாகக் கருதும் ஆங்கிலமே நமநாட்டுப் பொதுப்பாஷையாக அமைந்தால் வருங்கேடென்ன? இப்பொழுதோ 100க்கு 2½பேர் வீதம் ஆங்கிலக் கல்வி நம்நாட்டில் பரவியிருக்கிறது. இன்னும் நம்நாட்டில் அம்மொழியைப் பலர் கற்பதற்கு வசதி செய்தால் அதிக நலம் தாராதா? சிலர் மனப்பால் குடிக்கிறபடி ஆங்கிலத்துரைத்தனம் மாறிவிட்டாலும் ஆங்கில மொழிப்பயிற்சியை இழந்துவிட நம் இந்திய நாடு ஒரு பொழுதும் இணங்காது. அதனையும் ஒதுக்க நினைத்தால் ஆங்கிலத்தில் உள்ள உயர்தர உண்மை அறிவுகளை ஹிந்திமொழி கற்பிக்குமா? சம்ஸ்கிருதம் கற்பிக்குமா? தமிழ்தான் கற்பிக்குமா? இதனாலன்றோ T. R. வெங்கட்டராம சாஸ்திரியார் "காலக்கிரமத்தில் இங்கிலீஷ் அகில இந்திய பொதுப் பாஷை ஆகும் என்று நம்புகிறவர்களை நான் பார்த்திருக்கிறேன். இப்பொழுதோ ஹிந்தி இந்தியப் பொதுப்பாஷை ஆகுமென்று

குறைந்த விலை! குறைந்த விலை!!

புதிய வருஷத்தின் ஞாபகார்த்தமாக,

குறைக்கப்பட்டது.

காசி

அல்லது

நமது புண்ணிய பூமி.

வடநாட்டிலுள்ள புண்ணிய ஸ்தல யாத்திரை செய்ய விரும்புகிறீர்களா? உடனே "காசி அல்லது புண்ணிய பூமி" என்ற புத்தகத்துக்கு ஆர்டர் செய்யுங்கள்.

காசி, அயோத்தி, கயா, பிரயாகை, ஹரித்துவார், பிருந்தைவனம், மாயா, மதுரா, குருக்ஷேத்திரம், ஆக்ரா, டில்லி, கல்கத்தா போன்ற க்ஷேத்திரங்களுக்கு பிறர் உதவியின்றிப் போய்வர வழி காட்டியாகவும், உற்ற தோழனைப்போன்றும் உதவிபுரிய வல்லது.

உயரிய பேப்பரில் 92 பக்கங்களுடன் அழகாய் அச்சிடப்பட்டது. 16 (Halftone) சித்திரப் படங்கள் அடங்கியது. விலை ரூ 1—0—0

கே. எஸ். முத்தையா & ஸன்,

திருநெல்வேலி ஜங்ஷன்.

முத்தையா பிரெஸ்,

திருநெல்வேலி ஜங்.